செய்தி வெளியீடு எண் :39 நாள் :23.04.2018

**தேனி மாவட்டம்,**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் 29-வது சாலைப்பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு சாலைப்பாதுகாப்பு குறித்த வாகன விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்:-**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்தில் இன்று (23.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற 29-வது சாலைப்பாதுகாப்பு வார விழாவில், சாலைப்பாதுகாப்பு குறித்த வாகன விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து, வாகன ஓட்டிகளிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

விபத்தில்லா சாலை போக்குவரத்தினை ஏற்படுத்துவதற்காகவும், சாலை விதிகள் குறித்து வாகன ஓட்டிகள் மற்றும் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும், தமிழக அரசின் சார்பில் 29-வது சாலைப்பாதுகாப்பு வார விழா 23.04.2018 முதல் 30.04.2018 வரை கடைபிடிக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, 23.04.2018 இன்று சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியும், 24.04.2018 அன்று இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைகவசம், நான்கு சக்கர வாகன ஓட்டிகள் சீட் பெல்ட் அணிவதன் அவசியம் குறித்தும், 25.04.2018 அன்று கல்லூரி மாணவ, மாணவியர்களைக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவது, 26.04.2018 அன்று பள்ளி, கல்லூரி மற்றும் அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்தி, முதலுதவி குறித்த ஆலோசனைகள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், 27.04.2018 அன்று சுங்கச்சாவடி மையங்களில் சாலைப்பாதுகாப்பு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி வாகனத்தின் பின்புறங்களில் சிவப்பு நிற பிரதிபலிப்பான்கள் ஓட்டும் பணி மேற்கொள்ளுதல், 28.04.2018 அன்று அனைத்து முக்கிய சந்திப்புகள், வார சந்தைகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் ஊர்காவல்படை, தொண்டு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மூலம் வாகன ஓட்டுநர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், 29.04.2018 அன்று வாகன சோதனை நடத்தி அதிவேகம், அதிக பாரம், தலைகவசம், சீட்பெல்ட் அணியாமல் பயணித்தல், கைபேசி பயன்படுத்துதல் குறித்த சிறப்பு வாகன சோதனை மேற்கொள்ளுதல், சாலை பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்விழவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஷேக்முகம்மது அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், முன்னாள் தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள், தேனி வட்டாட்சியர் திருமதி.சத்தியபாமா அவர்ள், வட்டார போக்குவரத்து ஆய்வாளர்கள் திரு.செல்வம் அவர்கள், திரு.வெங்கடேசன் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.கணேசன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**